**15. அஞ்சுமான் கதை**



இவன் அயோத்தியில் இருந்தவன். சகரமன்னனுக்குப் பேரன். இயற்கையாகவேநல்லியல்பு அமையப் பெற்றவன். சகரர்கள் அறுபதினாயிரரும் கபிலர் வெகுளியால் மாண்டதை அறிந்தான். குதிரை வேள்விக்கு இடையூறு நேர்ந்ததே என்று வருந்திய பாட்டனாரைத் தேற்றிவிட்டுக் கீழ்உலகஞ்சென்றான். கபிலரைக் கண்டான். அடிதொழுது' போற்றினான். அவர் இவனுடைய நல்லியல்புக்குமகிழ்ந் தார். வந்தகாரியம் யாது என்று உசாவினார். இவன் குதி ரைச் செய்தியைக் கூறினான். கபிலர்அக்குதிரை அங்கு வந்த விவரத்தை விளக்கி விட்டுக் குதிரையைக் கொண்டுபோகச் செய்தார். இவனுங் குதிரையொடு வந்து பாட்டனாரின் மனக்கவலையைப் போக்கி வேள்வியை முடியச்செய்தான். சினத்தையொழித்தவர்கள் துறவிகளைப்போல் சிறந்த வர்களாவர் என்பதனைப் பலரும் இவ் வஞ்சுமானிடம்தெரிந்துகொண்டனர்.

[சினத்தையொழித்தல்]